எம்.சி.ஓ.பி எண்: 1364 /2024 தேதி: 06.07.2026

மசா. : 2

பெயர் : மகிபாலன் ஜூலியான்

த/பெ. : சகாயராஜ்

வயது : 27

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசராணை</u>**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 13 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த சாலை 4 வழி சாலை என்றால் சரி. நான் சுகி உணவு டெலிவரியில் வேலை பார்க்கிறேன். என்னுடைய தொழில் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை. விபத்தில் இறந்த நபர் எனக்கு தெரியாது. இறந்தவரின் மகன் அழைத்ததால் சாட்சி சொல்ல வந்துள்ளேன். புகார் நான் கொடுக்கவில்லை. குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சி எதுவும் அளிக்கவில்லை. விபத்து நடந்த சாலையில் நடுவில் தடுப்புச்சுவர் உள்ளது. விபத்து சாலையை கடக்கும்போதுதான் ஏற்பட்டது என்றால் சரி. பாதசாரிகள் கடக்கும் கோடு உள்ளதா என்றால் அந்த இடத்தில் இல்லை. பாதசாரிகள் கடக்கும் கோட்டில் நடந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் விபத்தில் இறந்தவர் அப்போது சாலையை கடக்கவில்லை. ஓரமாக நின்றுகொண்டிருந்தார். நான் விபத்து நடந்த இல்லை என்றாலும் மனுதாருக்கு உதவும் நோக்கத்தில் பொய்யாக சாட்சிஅளிக்கிறேன் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.